# உருகும் பாறை



பேதுருவின் மனமாற்றம்

**அருட்தந்தை தம்புராஜ் சே.ச**

அன்பின் மடல் வழங்கும் பொன்விழா நினைவு மலர்
www.anbinmadal.org

பேதுரு இயேசுவின் ஆப்த நண்பன். இயேசுவைப் பின்பற்றிய கூட்டத்தின் தலைவர். அப்போஸ்தலர்களுக்கெல்லாம் தலைவர். அந்தக் குழுவின் முதன்மை நிலை வகித்தவர். அவர் இயேசுவை மறுதலித்தார். இதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மூன்று ஆண்டுகளாக பேதுரு, இயேசுவோடு உண்டு, உறங்கி, இயேசுவோடு நடந்து, இயேசுவோடு போதித்து, இயேசு கொடுத்த அதிகாரத்தின் வழியாகப் பேய்களை ஓட்டினார். நோய்களைக் குணப்படுத்தினார். இயேசு நற்கருணையைப் பற்றி பேசிய பொழுது, 'என் தசையை உண்டு, என் இரத்தத்தைக் குடித்தாலொழிய உங்களுக்கு முடிவில்லா வாழ்வு கிடைக்காது என்று சொன்னார். அப்பொழுது இயேசுவின் சீடருள் பலர் ' இது ஒரு கடினமான காரியம், இந்தப் பேச்சை நாங்கள் நம்ப முடியாது, பின்பற்ற முடியாது ' என்று சொல்லி அவரை விட்டு விலகினார்கள். அவரை விட்டுப் பிரிந்து போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரை நோக்கி ' நீங்களும் போய் விட நினைக்கிறீர்களா? என்றார். அதற்கு சீமோன் பேதுரு, 'ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன. நீரே கடவுளின் பரிசுத்தர். இதை நாங்கள் விசுவசிக்கிறோம். இதை நாங்கள் அறிவோம்' என்று மறுமொழி கூறினார். இப்படிச் சொன்னவரா, இயேசுவை மறுதலித்தார் என்பதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் யூதாஸ். சதி முத்தம் கொடுத்து யூதாஸ் பொதுப் பணத்தை தன் கையில் வைத்திருந்தான். அந்தப் பொதுப் பணத்திலிருந்து அவன் அடிக்கடி பணத்தை எடுத்துக் கொள்வது உண்டு. ஆகவே அவன் ஒரு கள்வனாய் இருந்தான். அவனுடைய உள்ளம் மழுங்கிப் போயிருந்தது. கடினமாய்ப் போயிருந்தது. பாவச் சேற்றினால் பாழ் படுத்தப் பட்டிருந்தது.

ஆனால் பேதுரு இயேசு செய்த செயல்களை தாமும் செய்ய வேண்டும் என்று துடித்தவர். இயேசு கடல் மேல் நடந்தார். ஏன் நானும் நடக்கக் கூடாது என்று பேதுரு கடலின் மீது குதித்தார். கடல் மேல் நடந்தார். அந்த சக்தி வாய்ந்த பேதுருவா இயேசுவை மறுதலித்தார். இதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இயேசு ஒரு முறை தம் சீடர்களைப் பார்த்துக் கேட்டார். ‘மனுமகனே யார் என்று மக்கள் சொல்லுகிறார்கள்?’ அவர்களோ, ‘சிலர் திருமுழுக்கு யோவான் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் எரேமியாஸ் என்றும், அல்லது, இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்’ என்றனர்.

‘நீங்களோ என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்’ என்று இயேசு அவர்களைக் கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக, ‘நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்’ என்றார். (மத் 16:13-16) இப்படிச் சொன்ன அறிக்கையிட்ட பேதுருவா இயேசுவை மறுதலித்தார்?

ஒரு பகைவன், நமக்கு விரோதமாய் பேசும் பொழுது,நமக்கு விரோதமாய் ஒரு செயலைச் செய்யும் பொழுது கூட, நம்முடைய உள்ளம் குமுறாது, உடையாது, நொறுங்காது. ஆனால் நம்முடைய ஆப்த நண்பன் நம்மை மறுதலிக்கும் பொழுது, நமது உள்ளம் சுக்கு நூறாய் நொறுங்குகிறது.

பேதுரு இயேசுவின் மீது ஆழ்ந்த அன்பு வைத்திருந்தவர். ‘ஆண்டவரே உம்மோடு சிறைக்கும், சாவுக்கும் உள்ளாக ஆயத்தமாயிருக்கின்றேன்’. (லூக் 22:23) என்று ஒரு முறை பேதுரு கூறினார். பேதுருவின் பலவீனத்தை அறிந்திருந்த இயேசு, எத்தனையோ முறை அவரை எச்சரித்தார். ‘சீமோனே! சீமோனே! இதோ! சாத்தான் உங்களைக் கோதுமையைப் போல புடைக்க உத்தரவு பெற்றுக் கொண்டான். ஆனால் உன் விசுவாசம் தளராதபடி உனக்காக மன்றாடினேன். நீ திருந்திய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து’ (லூக் 22:31-32)என்றார். ‘எச்சரிக்கையாயிரு, கவனமாயிரு’ என்று எச்சரிக்கை கொடுத்தார். அப்பொழுது தான் பேதுரு கூறினார், ‘ஆண்டவரே! எல்லோரும் புறங்காட்டி ஓடினாலும் நான் உன்னைக் கைவிடேன். சிறைக்கும் சாவுக்கும் தயாராய் இருக்கிறேன்’. இயேசு கொடுத்த எச்சரிக்கையை மனத்தில் கொள்ளாது இவ்வாறு கூறினார். அவர் மிக மோசமாகத் தவறினார்.

எத்தனை முறை இயேசு நமக்கு எச்சரிக்கை கொடுக்கிறார். மனச்சாட்சி என்ற குரலின் வழியாக நம்மோடு இறைவன் பேசுகின்றார். ‘மகனே! மகனே! எச்சரிக்கையாயிரு. மீண்டும் அந்த இடத்திற்குச் சென்றால் தவறி விடுவாய். மீண்டும் அந்த ஆளோடு போனால் தவறி விடுவாய்,’ என்று நம் மனச்சாட்சியின் குரல்

பேசுகின்றது: கத்துகின்றது. இறைவன் குரல் கேட்கின்றது. அந்தக் குரலை எல்லாம் அடக்கி நாம் பாவத்திலே விழுகின்றோம்.

பேதுரு விநோதப் பிரியத்தினால் தொலைவில் நின்று என்ன நடக்கின்றது என்று பார்க்கின்றார். மற்ற சீடர்களெல்லாம் பயந்து ஓடி விட்டார்கள். உண்மை தான். ஆனால் பேதுரு ஏன் தொலைவில் நின்று பார்க்க வேண்டும்? இயேசுவோடு நடக்க தைரியம் இருந்திருந்தால் அவர் இயேசுவோடு, கூட சென்றிருக்க வேண்டும். இயேசுவோடு இருந்திருந்தால் இந்த சோதனை அவருக்கு வந்திருக்காது. ஆனால் இயேசுவை விட்டுத் தொலைவில் நின்று என்ன நடக்கப் போகிறது என்று பார்க்கின்றார். ஊதாரி மகன் தொலை நாட்டிற்கும் பயணமானான் என்று லூக் 15:13ல் படிக்கின்றோம். அவன் வாழ்ந்த நகரத்திலேயே இருந்திருந்தால், தன் தந்தை அவன் என்ன செய்கின்றான், எங்கே போகின்றான். யாரோடு பழகுகின்றான் என்று கவனித்து விடுவார் என்று தொலை நாட்டுக்குச் செல்லுகின்றான்.

பாவம் என்பது இதுதான். இறைவனிடமிருந்து தூரப் போவது தான் பாவம். இறைவனுக்கும் நமக்கும் இடையே ஒரு பெரிய பிளவை, பாதாளத்தை, இடைவெளியை ஏற்படுத்திக் கொள்வது தான் பாவம். பேதுரு தொலைவில் நின்று பார்த்ததினாலே அவரோடு இருந்த சீடரில் ஒருவர் (யோவான் என்று சிலர் சொல்லுகிறார்கள்), அவர் தலைமைக் குருவை நன்றாக அறிந்தவர், பேதுருவை மண்டபத்தின் உள்ளே கூட்டிச் செல்கின்றார். அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வாங்கி பேதுருவை உள்ளே அழைத்துச் செல்கின்றார்.

யோவானுக்குச் சோதனையை வெல்ல சக்தி இருந்திருக்கலாம். அந்தக் கூட்டத்தோடு இருந்து இயேசுவைப் பாதுகாக்கக் கூடிய சக்தி யோவானுக்கு இருந்திருக்கலாம். ஆனால் பேதுருவுக்கு அந்த சக்தி இல்லையே. அவர் ஒரு பலகீனர்.

அந்த மண்டபத்தின் உள்ளே பேதுரு நுழைந்ததும், ஓர் ஊழியக்காரி, 'நீயும் நசரேத்தூர் இயேசுவுடன் இருந்தாய்' என்றாள். அவள் ஓர் ஊழியக்காரி. அவளுடைய வேலை என்ன? வாயிலைக் காப்பது. அதாவது பாஸ்கா பெருவிழா சமயத்திலே, திருவிழாவில் பங்கேற்கும் பலபேர் எருசலேமை நோக்கி வருவார்கள். அந்த அரண்மனையில் திருட்டு போகலாம். வேண்டாதவர்கள் உள்ளே நுழையலாம். அரண்மனையைச் சுத்தமாக வைக்காமல் அதைப்

பாழ்படுத்தலாம். ஆகவே, அதிகாரிகள் ஒரு வேலையாளை, ஊழியக்காரி ஒருத்தியை வாயிலைக் காக்க வேண்டும் என்று அங்கே அமர்த்தி இருந்தனர். அந்த ஊழியக்காரி தன் கடமையைச் செய்கின்றாள். புது முகம் ஒன்று தெரிகின்றதே இந்தக் கூட்டத்திலே, என்று பேதுருவை உற்று நோக்கி ஒரு கேள்வியைக் கேட்டு வைப்போம் என்று கேட்கின்றாள். பதிலை அவள் எதிர் பார்க்கவில்லை.

பேதுரு மௌனம் காத்திருக்கலாம். மௌனம் காத்திருந்தால் இயேசுவை மறுதலித்திருக்க மாட்டார். அவள் யாரோ எதையோ கேட்கிறாள் என்று மௌனம் காத்திருந்திருக்க வேண்டும். மாறாக 'நான் அல்லேன்' என்று கூறி இயேசுவை முதன் முறையாக மறுதலிக்கின்றார்.

நம்முடைய வாழ்க்கையிலும் தேவைக்கு மேற்பட்டு நாம் பேசத் தேவையில்லை. ' உங்கள் பேச்சு ஆம் என்றால் ஆம் இல்லை என்றால் இல்லை என்று இருக்கட்டும். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீயவனிடமிருந்தே வருகிறது'. (மத் 5:37) என்றார் இயேசு. நாவடக்கம் நமக்கு மிகவும் முக்கியம். நாவடக்கம் இல்லாததினால் எத்தனை குடும்பங்கள் சீரழிந்து விடுகின்றன. மௌனம் காக்க வேண்டிய சமயங்களில் நாம் மௌனம் காக்க வேண்டும்.

இன்னொரு தவறு பேதுரு செய்கின்றார். ஒரு முறை மக்கள் தன்னைப் பற்றிச் சந்தேகப் பட்டார்கள், இவன் இயேசுவின் சீடன் என்று உடனே அந்த இடத்திலிருந்து அவர் வெளியே சென்றிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக, அவர் ஊழியக்காரர்களோடும், படை வீர்ர்களோடும் கரி நெருப்பைச் சுற்றி குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்.

அவர் சும்மா இருந்திருக்க மாட்டார். அங்கிருந்தவர்களோடு பேச்சு கொடுத்திருப்பார். அவர் தூக்கக் கலக்கத்தில் இருந்ததால், தூக்கம் கலைந்து விடும் என்று அவர் பேசியிருப்பார். உடனே அவர்கள் அவரைக் கண்டுபிடித்து விடுகின்றார்கள். அவருடைய உச்சரிப்பைக் கேட்டு இவன் ஒரு கலிலேயன் வடநாட்டுப் பகுதியிலிருந்து வருபவன்! என்று கண்டு கொள்கின்றார்கள்.

உடனே அவர்களும் ஒரு கேள்வியைக் கேட்கின்றார்கள். 'நீயும் நசரேனாகிய இயேசுவினுடைய சீடனல்லவா' என்று இரண்டாம் முறை பேதுரு என்ன சொல்கின்றார் தெரியுமா? 'அந்த

ஆளை எனக்குத் தெரியவே தெரியாது' என்று ஆணையிட்டு மீண்டும் மறுத்தார்.

நீர் தான் உண்மையான மெசியா. கடவுளின் மகன் என்று சொன்ன அதே நாக்கு இப்பொழுது 'அந்த ஆளை எனக்குத் தெரியாது என்று சொல்லி ஆணையிடுகின்றது.

ஒரு தடவை பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் இரவு முழுவதும் மீன் பிடிக்கப் பாடுபட்டனர். மீன் ஒன்றும் தென்படவில்லை. அப்போது இயேசு அங்கு வந்து கரையில் நின்றார். 'பிள்ளைகளே வலது பக்கம் வலையை வீசுங்கள்' என்றார். அவரது வார்த்தைப்படி வலது பக்கம் வலையை வீசினர். ஏராளமான மீன்களைப் பிடித்தனர். தொலைவில் நின்று கொண்டிருந்தவர்களை உதவிக்குக் கூப்பிட்டனர். வலை கிழியும் தருவாயில் இருந்தது. ஆகவே இரண்டு படகுகளில் மீன்களைக் கொட்டி நிரப்பினர். அப்பொழுது பேதுரு இயேசுவின் கால்களில் விழுந்து, 'ஆண்டவரே! நான் பாவி! என்னை விட்டு அகன்று போம்' என்றார். 'ஆண்டவரே!' என்று சொன்ன அந்த பேதுரு இப்பொழுது என்ன சொல்கின்றார்? "அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது என்று .

எவ்வளவு கோழைத்தனம் பாருங்கள்! சாதாரண ஊழியக் காரர்களைப் பார்த்து தொடை நடுங்குகின்றார். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று, தனது உயிருக்கு ஆபத்து ஒன்றும் வரக் கூடாது என்று, இப்படி இயேசு பெருமானை மறுதலிக்கின்றார்.

கெத்செமனாத் தோட்டத்திலே யூதாசோடு, படைத்தலைவர்களும், படைக்காவலர்களும், யூதர்களும், உரோமையர்களும் இயேசுவைப் பிடிக்க வந்த போது இயேசு கேட்டார். 'யாரைத் தேடுகின்றீர்கள்' என்று, 'நசரேனாகிய இயேசுவை' என்றனர். 'நான் தான்' என்று சொன்னார் இயேசு, 'நான் தான்' என்று சொன்னதோடு நின்று விடவில்லை. 'இவர்களைப் போக விடுங்கள்' என்று சொல்லித் தன்னைக் கையளித்து பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் காப்பாற்றினார். அவர்களுடைய உயிரைக் காப்பாற்றினார். தாய் தன்னுடைய உயிரைக் கையளித்து தன் குழந்தையைக் காப்பாற்றுவது போல, அந்த தாயன்பை அப்பொழுது வெளிப்படுத்தினார். அந்த அண்ணலை, செம்மலை முடிவில்லா வாழ்வு தரும் மெசியாவை, மனுமகனே, கடவுளின் மகனே, 'அந்த ஆள் யாரென்று எனக்குத்

தெரியாது' என்று சொல்லி பேதுரு மறுதலிக்கிறார். இரண்டாம் முறை அவர் சோதிக்கப்பட்டார், தவறி விழுந்தார். அவர் உடனேயே அந்த இடத்தை விட்டு வெளியே சென்றிருக்க வேண்டும். ஆனால் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தார். விவிலியம் சொல்லுகின்றது 'சீமோன் பேதுரு அங்கு நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தார்'. அப்பொழுது மூன்றாம் முறை ஒரு கேள்வி கேட்கப்படுகிறது.

முதல் முறை பேதுரு 'நான் அல்லேன்' என்றார். இரண்டாம் முறை 'அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது' என்று ஆணையிட்டார். மூன்றாம் முறையாக 'அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது' என்று சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார்.

பேதுரு அச்சத்தினாலும், பயத்தினாலும் சபிக்கின்றார். இயேசுவில் அன்பார்ந்தவர்களே! நாம் சோதனையில் விழும் பொழுது, இப்படித்தான் படிப்படியாகப் பள்ளத்தாக்கிலே சரிந்து விழுகின்றோம். தொடக்கத்திலேயே, சோதனைக்குரிய சந்தர்ப்பங்களை நாம் தவிர்க்க வில்லையென்றால், நாம் படிப்படியாக ஆழத்திலே சறுக்கி விழுந்து மூழ்க வேண்டியது தான்.

இறுதியாக பேதுரு அந்த வார்த்தைகளைக் கூறும் பொழுது, இயேசுவை அந்தப் பக்கம் அடித்து இழுத்து வருகின்றார்கள். இயேசு அந்தப் பக்கம் வந்த பொழுது பேதுருவின் சபிக்கும், ஆணையிடும் வார்த்தைகளைக் கேட்கின்றார். 'நல்ல ஆயன் நானே, தந்தை என்னை அறிவது போலவும், நான் தந்தையை அறிவது போலவும், என் ஆடுகளை நான் அறிவேன். அவையும் என்னை அறிகின்றன' என்று யோவான் 10:14-15ல் நாம் படிக்கின்றோம். நல்ல ஆயனுக்குத் தன் ஆடுகளின் குரல் நன்றாகக் கேட்கும். இப்பொழுது நன்றாகவே, தெளிவாகவே கேட்கின்றது. தன்னுடைய ஆட்டுக் குட்டியின், சபித்தலும், ஆணையிடலும் கேட்கின்றது. அப்பொழுது பேதுருவின் வார்த்தைகள், இயேசுவின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல இருந்தன. விவிலியம் சொல்லுகின்றது, 'அந்த வார்த்தைகளைக் கேட்டதும், இயேசு திரும்பி பேதுருவை உற்று நோக்கினார்.

இயேசு திரும்பி பேதுருவை உற்று நோக்கிய அந்தப் பார்வையில் எத்துணை அர்த்தம், எத்துணை இரக்கம், எத்துணை அன்பு, எத்துணை நம்பிக்கை!

நீ ஒரு கற்பாறை, உன் மீது என் திருச்சபையைக் கட்டுவேன்! என்று சொன்னார் இயேசு. இப்பொழுது அந்தக் கற்பாறையை இயேசு நோக்குகின்றார். அந்தக் கற்பாறையின் மீது மோதுகின்றார். அந்தக் கற்பாறையின் மீது விழுகின்றார். பாறையில் விழுந்தால் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியும். பாறையில் விழுந்தால் மண்டை உடையும், சதை கிழியும். அந்த கற்பாறையைத் திரும்பிப் பார்க்கின்றார். இயேசுவின் உள்ளம் உடைகின்றது. அவருடைய இதயம் சுக்கு நூறாய் நொறுங்குகின்றது.

விவிலியம் சொல்லுகின்றது! உடனே கோழி கூவிற்று. காலை மூன்று மணி! உடனே கோழி கூவிற்று. பேதுரு வெளியே சென்று மனம் வெதும்பி அழுதார். முதலிலேயே வெளியே சென்றிருக்கலாம், சென்றிருக்க வேண்டும், செல்ல வில்லை. கோழி இரண்டாம் முறையும் கூவிற்று. ‘இரு முறை கோழி கூவு முன்பு நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்! என்று இயேசு தமக்குச் சொன்னதை பேதுரு கண்ணீர் சிந்தி அழலானார். (மாற்கு 14:72).

இயேசுவில் அன்பார்ந்தவர்களே! இறைவன் அன்பைக் குறித்து நமக்கு மறதி அதிகம். இறைவன் பல முறை நமக்கு எச்சரிக்கை கொடுத்தும் நமக்கு மறதி அதிகம்.

கோழி கூவினவுடன் இதை நினைவு கூர்ந்தார் பேதுரு. வெளியே சென்று மனம் வெதும்பி அழுதார். அச்சத்தினாலும், பயத்தினால் இந்தக் கற்பாறை மனந் தளர்ந்தது. இப்பொழுது இயேசுவின் இரக்கப் பார்வையைக் கண்டு உருகுகின்றது. கற்பாறை உருகுகின்றது. உருகும் கற்பாறையாய் மாறுகின்றார் பேதுரு. இயேசு இந்தக் கற்பாறையை உருகச் செய்கின்றார். இயேசுவின் பார்வையிலே இப்பொழுது பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றார். இயேசு பேதுருவைப் பார்த்தார். பேதுரு மனம் மாறினார். இயேசு யூதாசையும் பார்த்தார். பார்த்தது மட்டுமல்ல, அவனோடு பேசினார். அவனைக் கெஞ்சினார். ‘யூதாசே! மனுமகனே முத்தமிட்டோ காட்டிக் கொடுக்க வந்திருக்கிறாய்?’ அவனைப் பார்த்தார். பேசினார். கெஞ்சினார். பயனில்லை.

இது தான் யூதாசுக்கும் பேதுருவுக்கும் உள்ள வேறுபாடு. யூதாஸ் நம்பிக்கை இழந்தான். மனம் சோர்ந்து போனான். தான் பாவி என்று சொன்னதோடு நின்று விட்டான். பேதுரு தான் பாவி என்று சொல்லி மனம் கசிந்து அழுதார். இயேசுவிடம் மன்னிப்பு

கோரினார். அப்போஸ்தலர்கள் கூட்டத்தில் மீண்டும் வந்து சேர்ந்தார்.

இயேசுவில் அன்பார்ந்தவர்களே! நாமும் எத்தனையோ முறை தன்னலத்தினால், சுய நலத்தினால், அச்சத்தால், பயத்தால், கோழைத்தனத்தினால், முகத்தாட்சண்ணியத்தால் இயேசுவை மறுதலித்திருக்கிறோம். பாவத்திலே நம் மனத்தை ஒருமைப்படுத்தி நின்று விடவேண்டாம். நம்பிக்கை இழக்க வேண்டாம். மனம் சோர்ந்து போக வேண்டாம். இயேசுவின் இரக்கப் பார்வையில் நம் மனத்தைச் செலுத்துவோம்.

யோவான் எழுதிய முதல் திருமுகத்திலே யோவான் சொல்வதைக் கேளுங்கள். ‘நம் பாவங்களை ஏற்றுக் கொள்வோமானால், அவர் நம்பிக்கைக்குரியவர், நீதியுள்ளவர் என விளங்குவார், நம் பாவங்களை மன்னிப்பார்’ (1 யோவான் 1:9) ‘என் அன்புக் குழந்தைகளே நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டுமென்றே இதை உங்களுக்கு எழுதுகிறேன். ஆனால் ஒருவன் பாவஞ் செய்ய நேர்ந்தாலும் பரம தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கின்றார் அவரே இறைவனுக்கு ஏற்புடையவரான இயேசு’ (1 யோவான் 2:1)





இனிகோவின் வழியில்
சேசு சபையில்
பொன்விழா காணும்
இனிய தந்தை

அருட்தந்தை தம்புராஜ் சே.ச.
அவர்களை அன்புடன்
வாழ்த்துகின்றோம.!
அவரின் சேவை மேன்மேலும் சிறக்க
இறைமகன் இயேசுவை இறைஞ்சுகின்றோம்...

அன்பின் மடலின்
அஸ்திவாரமாய்
வளர்ச்சியின் உரமாய்
ஆக்கமும் ஊக்கமும்
தந்து வழிநடத்தும்
பொன்விழா நாயகனுக்கு
எங்கள் இதயம்
கனிந்த நன்றி ..

